**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.190/2022**

**நாள் : 23.02.2026**

**ம.சா. 1 திருமதி.கலைவாணி**

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஹாஸ்டல் ஷூ கம்பெனிக்கு அந்த கம்பெனியால் வழங்கப்பட்ட பேருந்தில்தான் தினமும் சென்று வருவேன் என்றால் சரிதான். அந்த பேருந்தில் சுமார் 15–20 பேர் பயணித்தோம். மேற்படி பேருந்தில் 32 பேர் பயணித்தோம் என்றும், வழக்கிற்காகவேண்டி தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தில் 13 பேர்தான் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு அதில் 20 பேர் பயணிக்கலாம் என்று கூறுகிறார். அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கும் கூடுதலாக பயணித்த நிலையில் விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு 2ஆம் எதிர்மனுதாரர் எந்த விதத்திலும் பொறுப்பேற்கமுடியாது என்றால் சரியல்ல. நான் விபத்திற்கு பின்னிட்டு ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு முடியாது என்று கூறிவிட்டதால் வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். ம.சா.ஆ.2 ஆவணத்தில் எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு எழுதபடிக்க தெரியாது. (ம.சா.ஆ.2 ஆவணத்தில் சாதாரண காயம் என்று கண்டுள்ளதாக தெளிவுபடுத்தப்பட்டது) சாட்சி பின்னிட்டு ஆவணத்தை படித்து பார்த்து சாதாரண காயம் என்று குறிப்பிட்டுள்ளதாக ஒப்புக்கொள்கிறார். ம.சா.ஆ.10 ஸ்கேன் அறிக்கையில் எனக்கு எவ்வித எலும்பு முறிவும் ஏற்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பதால் நான் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகப்படியானது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.13 ஆவணத்தில் எனது நிகர

மாதச்சம்பளம் ரூ.8,306/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயம் சம்பந்தமாக அதிகப்படியாக இழப்பீடு பெறும் நோக்கில் காயத்தை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. காப்பீட்டு விதிகளை மீறி அதிகப்படியான பயணிகளை ஏற்றிச்சென்றதாலேயே விபத்தானது ஏற்பட்டது என்பதால் 2ஆம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.